**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.190/2023**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : கொத்தையம் | வயது | : சுமார் 60 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 04.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் வேலுச்சாமிக்கு 1ம் பிரதிவாதி கருப்பாத்தாள் மனைவி என்றால் ? சரிதான். வேலுச்சாமிக்கு, நான், சுந்தரமூர்த்தி, 2-ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் ஆண்மக்கள் என்றால் ? சரிதான். எனது தகப்பனார் வேலுச்சாமி என்பவர் 2010ம் ஆண்டே இறந்துவிட்டார் என்றால் ? சரிதான். சுந்தரமூர்த்தி எப்போது இறந்தார் என்றால் ? 2018ம் ஆண்டே இறந்துவிட்டார். வேலுச்சாமிக்கு 1-ம் பிரதிவாதி கருப்பாத்தாள், 2ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி, நான் ஆகிய மூவரும் மட்டுமே வாரிசுகள் என்றால் ? சரிதான். 31.05.2004ம் தேதி ஊர் பெரியவர்களை வைத்து நான் எனது சகோதரர்கள் மற்றும் தகப்பனாரிடமிருந்து தொகை ரூ.1,00,000 பெற்றுக் கொண்டு பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான். பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் நாங்கள் பொதுவாக இருந்து சம்பாதித்ததில் எனக்கு ஏதாவது ஒரு தொகையாவது கொடுத்து உதவுங்கள் என்று கூறும் போது எனது தகப்பனார் வேலுச்சாமி என்பவர் எனது சகோதரர் இருவருக்கும் சேர்ந்து எனக்கு தொகை

ரூ.1,00,000 கொடுக்க வேண்டியது என்றும், நான் மேற்படி மூன்று பேர்களிடமும் தொகை ரூ.1,00,000 ரொக்கமாக பெற்றுக் கொண்டு நாளது தேதியில் இருந்து நான் தனிக்குடும்பமாக சென்று விடுகிறேன் என்று கூறி மேற்படியார்கள் பைசல் படி என்று சரத்து கண்டு பாகபாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். இனிமேல் உங்கள் மூன்று பேருக்கும், எனக்கும் உயிர் சொந்தமோ, பொருள் சொந்தமோ யாதென்றும் கிடையாது என்றும், இனிமேல் நீங்கள் மூன்று பேர்களும் சுயமுயற்சியால் லேவாதேவிகள் செய்தாலும், எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அப்படி ஏதேனும் உரிமை கொண்டாடி எவ்வித கோர்ட்டுகளுக்கோ நியாய ஸ்தலங்களுக்கோ சென்றாலும், எனக்கு எவ்வித அதிகாரம் இல்லை என்றும், எனது மனசம்மதியில் எழுதிக் கொடுத்த பொது குடும்ப பாக பாத்திய விடுதலை பத்திரம் என்று கண்டுள்ளது என்றால் ? சரிதான். வழக்குரை 2–வது அயிட்ட சொத்தினை 2–ம் பிரதிவாதி கடந்த 23.05.1996–ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரிதான். பொதுக்குடும்ப நிதியில் இருந்து வாங்கிய சொத்து ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும், பொதுக்குடும்ப நிதியில் இருந்து நான் தொகை ரூ.1,00,000 பெற்றுக் கொண்டு விடுதலை ஆவணம் வா.சா.ஆ.3 எழுதுவதற்கு முன்பாகவே கிரையம் பெற்ற சொத்து தான் தாவா 2வது அயிட்டசொத்து என்றால் ? சரிதான். தாவா 3–வது அயிட்ட சொத்து இறந்துபோன எனது சகோதரர் சுந்தரமூர்த்தி என்பவர் கடந்த 26.02.2009ம் தேதி கிரையம் வாங்கிய சொத்து என்றால் ? சரிதான். அதே தேதியில் எனது மற்றொரு சகோதரர் 2–ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி 3வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரிதான். மொத்தம் 6 ஏக்கரில் 3 ஏக்கர் எனது சகோதரர் சுந்தரமூர்த்தி என்பவரும் மற்ற 3 ஏக்கரை எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தியும் கிரையம் பெற்றார் என்றால் ? சரிதான். சுந்தரமூர்த்தி என்பவர் கடந்த 2018ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் ? சரிதான். சுந்தரமூர்த்தி என்பவர் மனநலம் சரியில்லாதவர் ஆவார். சுந்தரமூர்த்தி இறந்ததில் இருந்து அவரது ஒரே வாரிசு அவரது தாயார் என்றால் ? சரிதான்.

சுந்தரமூர்த்தி என்பவருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் ? அவருக்கு திருமணமே ஏற்படவில்லை. 1–ம் பிரதிவாதி கருப்பாத்தாள் என்பவர் தன்னுடைய மகனான 2ம் பிரதிவாதிக்கு கடந்த 25.03.2019ம் தேதி ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக சுந்தரமூர்த்தி என்பவர் கிரையம் பெற்ற சொத்துக்களை 1–ம் பிரதிவாதி கருப்பாத்தாள் வாரிசு என்ற முறையில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார் என்றால் ? சரிதான். சாட்சி மீண்டும் எனக்கு எழுதி வைத்தது தெரியாது என்று பதில் அளித்தார். 1–ம் பிரதிவாதி எப்போது சொத்துக்களை எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் ? சுந்தரமூர்த்தி இறந்து 7 மாதத்தில் சொத்துக்களை கருப்பாத்தாள் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். அதற்கு பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து எனக்கு தெரியும். தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எந்தவித பங்கு பாத்தியமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. பொது சொத்துக்களில் இருந்து வாங்கிய சொத்து ஆகும். தாவா 1வது அயிட்டசொத்து இறந்துபோன எனது தகப்பனார் வேலுச்சாமிக்கு பட்டா வழியில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தில் வாதிகளாகிய எங்களுக்கு 1/3 பங்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பாகமும், கிடைக்கத்தக்கது என்றால் ? சரிதான். எனது தகப்பனார் வேலுச்சாமி எப்போது இறந்தார் என்றால் 2010ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது சகோதரர் எப்போது இறந்தார் என்றால் ? 2018ம் ஆண்டு இறந்துவிட்டார். எனக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் சட்டப்படியான பங்கு பாத்தியம் கிடைப்பதில் இந்த பிரதிவாதிகளுக்கு ஆட்சபேனை இல்லை என்றால் ? சரிதான். தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.04 16:15:45 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்